**OPEN ACCESS**

Manuscript ID: TAM-070320236092

Volume: 7

Issue: 3

Month: January

Year: 2023

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 07.10.2022

Accepted: 21.12.2022

Published: 01.01.2023

Citation:
Sivanpandi, P., and A. Nanthini. "Vela Ramamurthi Puthinangalil 'Eruthugattu.'" Shanlax International Journal of Tamil Research, vol. 7, no. 3, 2023, pp. 81–89.

DOI:
https://doi.org/10.34293/tamil.v7i3.6092

*Corresponding Author:
nanthu1977@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Vela Ramamurthi Puthinangalil 'Eruthugattu'

**P. Sivanpandi**
*Ph.D. Research Scholar, Tamil Research Centre*
*Senthamil College, Madurai, Tamil Nadu, India*

**Dr. A. Nanthini**
*Assistant Professor, Tamil Research Centre*
*Senthamil College, Madurai, Tamil Nadu, India*
*http://orcid.org/0000-0003-2753-1840*

**Abstract**
Any creator sees events, grows and lives in his own soil. Therefore, in his mind, the land of his birth, the people who lived there, and the news he saw and heard there became the raw material for his work. Writing and reading provide concentration for typing. In this way, Vela Ramamurthy, who is a native of the region, is a creator of works based on Appanadu located in Kamudi area of Ramanathapuram district. The ideas recorded in his works are diverse. This article explores and explains his records about the heroic game called Erudugatu which is held in the area.

**Key Words:** Own Soil, Land of his Birth, Native of Region, Appanadu Located in Kamudi

**References**

1. Kanthaiya Pillai, Na. Si. 2015. *Theninthiya Kulangalum Kudigalum*, Chennai, Santhiya Pathipagam, First Edition.
2. Konangi. 2000. *Pazhi*, Chennai, The Parkar, First Edition
3. Palani Kumar, Ka.Si. 2016. *Aandalin Kavithai Veli*, Chennai, Santhiya Pathipagam, First Edition.
4. Pavel Bharathi. 2017. *Erutaluvutal, Jallikkattu, Thonmai Panpadu, Arasiyal*, Karuthu Sri Pattarai, Madurai, Second Edition
5. Velaramamoorthi. 2019. *Kuruthiyattam*. Chennai, Discovery book Palace, First edition
6. Velaramamoorthi. 2021. *Kuruthiyattam*, Chennai, Discovery book Palace, Third edition

# வேல ராமமூர்த்தி புதினங்களில் "எருதுகட்டு"

*பா. சிவன்பாண்டி*
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வு மையம்
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

*முனைவர் அ. நந்தினி*
உதவிப் பேராசிரியர், நெறியாளர்
தமிழ் உயராய்வு மையம், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

**ஆய்வுச்சுருக்கம்**

*எந்தவொரு படைப்பாளனும் தமது மண்ணில் கருத்தாங்கியே நிகழ்வுகளைக் காண்கிறான்; வளர்கிறான்; வாழ்கிறான். எனவே அவனது சிந்தனாசக்தியில் அவன் பிறந்த மண்ணும் அங்கு வாழ்ந்த மனிதர்களும் அங்கு கண்டு கேட்டு உற்றறிந்த செய்திகளும் அவனது படைப்பிற்கான கச்சாப்பொருளாக உருமாறுகின்றன. எழுத்தும் வாசிப்பும் அப்படைப்பிற்கான செறிவைத் தருகின்றன. அவ்வகையில் இராமநாதபுரம் மாவட்டம் கமுதி வட்டாரத்தில் அமைந்துள்ள ஆப்பநாடு சார்ந்த படைப்புகளைப் படைக்கும் படைப்பாளியாக அப்பகுதியைச் சார்ந்த வேல ராமமூர்த்தி இருக்கிறார். அவரது படைப்புகளில் பதிவுபெற்றுள்ள கருத்துக்கள் பலப்பலவாக அமைந்துள்ளன. அதில் அப்பகுதியில் நடத்தப்படுகின்ற எருதுகட்டு என்னும் வீரம் சார்ந்த விளையாட்டினைப் பற்றிய அவரது பதிவுகளை இனங்கண்டு விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.*

***கருச்சொற்கள்:*** *சொந்த மண், அவர் பிறந்த பூமி, பூர்வீகம், கமுதியில் அமைந்துள்ள அப்பநாடு*

## முன்னுரை

தமிழக மக்களின் வாழ்வியல், சடங்கு மற்றும் தெய்வம் சார்ந்த நம்பிக்கைகள், தொன்மங்கள் ஆகிய நாட்டுப்புற வழக்காறுகளுடன் தொடர்புடையவையாக அமைந்துள்ளன. மனித நம்பிக்கைகளின் தொடர்ச்சியே முன்னோரது செயல்களைச் செய்யத் தூண்டுகோலாக இருக்கிறது. தமிழர்களின் தனித்த அடையாளங்களாக ஒருசில பண்பாட்டு நடவடிக்கைகள் அமைந்துள்ளன. அவற்றுள் ஒன்றாக ஏறுதழுவுதல் என்ற நிகழ்வு நடைபெறுகிறது. முன்பு ஏறுதழுவுதல் என்ற பெயரில் மட்டும் அழைக்கப்பட்ட பண்பாடு சார்ந்த அந்த வீரவிளையாட்டு இன்று காலமாற்றத்தாலும், நிகழ்த்தப்படும் முறையாலும், வகுக்கப்பட்ட விதிகளாலும் பலபெயர்களைக் கொண்டதாக மாற்றமடைந்துள்ளது. அதில் ஒருபெயராக வழக்கிலுள்ள எருதுகட்டு என்னும் நிகழ்வு இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் தெய்வம்சார் நிகழ்வாக நடத்தப்பட்டு வருகிறது. இதனைப் பற்றிய செய்திகளை வேல ராமமூர்த்தியின் புதினங்கள் வழி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## தமிழ்ப் புனைகதைகளில் ஏறுதழுவுதல்/ எருதுகட்டு

நூற்றாண்டைக் கடந்து வளர்ந்து வரும் தமிழ்ப் புனைகதை வரலாற்றில் "ஏறுதழுவுதல்" குறித்த இலக்கியப் பதிவுகள் வெகு சொற்பம்தான். தமிழில் இரண்டாவது புதினமான பி.ஆர்.ராஜமய்யரின் "கமலாம்பாள் சரித்திரத்தில்" ஜல்லிக்கட்டு குறித்த பதிவு இடம்பெறுகிறது. 'சோளம நாயக்கனூர்

ஜமீனும் சுப்பிரமணிய ஐயரும் சிறுகுளம் எனும் ஊரில் நடக்கும் ஜல்லிக்கட்டிற்கு காளைகளைக் கொண்டு போகிறார்கள். சோளம நாயக்கனூர் ஜமீன்தாரின் ''கண்ணாடி மயிலை'' அந்தப் பகுதியில் வெகுபிரசித்தம். ஆனால் இந்த நிகழ்வில் அந்தக் காளையை சுப்பிரமணிய ஐயரின் ஆட்கள் அடக்கிவிடுகிறார்கள். அதே சமயம் புதிதாக வாங்கிய சுப்பிரமணிய ஐயரின் இரண்டு காளைகளும் வெற்றி பெற்றுவிடுகின்றன. இதனால் கோபமடைந்த ஜமீன்தார் தோற்றுப்போன தன் மாட்டை வரவழைத்து, பறையரை விட்டுத் தன்னெதிரிலேயே உயிரோடு தோல் உரிக்க உத்தரவிடுகிறார்.' இதுதான் தமிழ்ப் புனைகதை வரலாற்றில் ஏறுதழுவுதல் குறித்த முதல் பதிவு. சி.சு.செல்லப்பாவின் ''வாடிவாசல்'' முழுக்க முழுக்க ''மஞ்சுவிரட்டை'' மட்டுமே மையப்படுத்தி எழுதப்பட்ட முதல் புனைவு ஆகும். கு.ப.ராஜகோபாலனின் ''வீரம்மாளின் காளை'' என்னும் கதையில் மேலூர் வட்டாரத்தில் நடைபெறும் ''மஞ்சுவிரட்டு'' குறித்துப் பதிவு செய்யப்பட்டுள்ளது..

சமீபத்திய புனைவுகளில் சு.வெங்கடேசனின் ''காவல் கோட்டம்'' புதினம் பிரமலைக் கள்ளர் பண்பாட்டில் நிலவும் ஜல்லிக்கட்டு குறித்துப் பதிவு செய்கிறது. தமிழ்ப் புனைகதை வரலாற்றில் ராஜமய்யரால் 1896லேயே தொடங்கி வைக்கப்பட்ட ஏறுதழுவுதல் பற்றிய புனைவெழுத்து, ஒரு நூற்றாண்டைக் கடந்தும் கூட ஏழு படைப்பாளர்களால் மட்டுமே கைக்கொள்ளப்பட்டிருக்கின்றது. இவர்களிலும், ஜல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு, எருதுகட்டு என்கிற, பெரும்பான்மை மக்களிடத்தே காணப்படுகின்ற மூன்று வகைகள் மட்டுமே, புனைவுக்கெனத் தேர்ந்து கொள்ளப் பெற்றுள்ளன.

இவற்றிலும், கு.ப.ரா. மற்றும் செல்லப்பாவால் மட்டுமே ''ஏறுதழுவுதல்'' படைப்புப் பிரதிகளின் மையச் சரடாகக் (கருவாக கைக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஏனையோரால், தாம் தேர்ந்துகொண்ட முதன்மைக் கருத்துக்களுக்கு வலுவூட்டும் பொருட்டாக மட்டுமே ஆளப் பெற்றுள்ளது[1]. ராஜம் அய்யர், செல்லப்பா, கு.ப.ரா., கொத்தமங்கலம் சுப்பு, அகிலன், வேல ராமமூர்த்தி மற்றும் சு.வெங்கடேசன் ஆகியோரே அந்த எழுவர் ஆவர். இவர்களைத் தவிர கோணங்கியின் ''பாழி'' புதினத்தில் ஏறுதழுவுதல் குறித்த பதிவு இடம்பெறுகிறது.

குரால் நிறக் கண்கள் கொண்ட காளை கொலைக் குணத்துடன் தழுவுபவனை விசிறியது. கூட்டத்தின் மேல், கொடிய பகைமையுள்ள செவலை எருதில் புலிப்போல் பாய்ந்தான் நெட்டையான யுவன். பறைகள் எழுந்தன ஓசையுடன். பறையால் சினந்த எருது எட்டுவைத்து வந்தது சண்டைக்கிழுக்க. அதைப் பின்வாங்கிப்போய் பதுங்கிப் பாய்ந்தவனைக் கொம்பு மேல் சுழற்றி ஆடியது காளை. கூக்குரல் பறைமுழக்கம் சினங்குறைய எருதொன்று வெகுண்டு பாய்ந்தவனைத் தரையோடு குத்திக் காலை மடித்து தொலைவே ஓடிப் பின்னொடும் பறையின் ஒலிக்குப் புலிக்கு வலம் பாய்ந்தது காளை. தழுவமுயன்றவன் நிலத்தில் வீழ்ந்தான் புண்பட்டு. விழுந்தவன் உருண்டு எழுந்ததும் பின்வாங்கி குபீரென்று திமிலைப் பிடித்தான் தாவி. கொம்பு மார்பில்படுவதை உணர்ந்தும் உயிர் கொடுத்து கொம்பைச் சுருட்டிப் பிடித்தான் கிடுக்காய்.[2] ''ஏறுதழுவல்'' நிகழ்வைக் கண்முன் காட்சிப்படுத்தும் இவ்வரிகள் பாழி புதினத்தில் உள்ள சிந்துவெளி பூட்டிய ரிஷப வண்டி எனும் அத்தியாயத்தில் இடம்பெறுகிறது. இவ் அத்தியாயம் முழுக்க ''ஏறுதழுவுதலை'' மையப்படுத்துகிறது.

### வேல ராமமூர்த்தி புதினங்களில் ''எருதுகட்டு''

தற்காலத் தமிழ்ப் புனைகதைகளில் இடம்பெறும் ''ஏறுதழுவுதல்'' குறித்த சிற்சில பதிவுகளில் வேல ராமமூர்த்தியின்

புனைகதைகளுக்கு முக்கிய இடம் உண்டு. இவர் தம் புனைகதைகளில் ஆப்பனாட்டு மறவர்களுக்கும் “எருதுகட்டு” எனும் ஏறுதழுவுதல் நிகழ்விற்கும் இடையிலான நெருங்கிய உறவு குறித்தப் பதிவுகள் ஆங்காங்கே இடம்பெறுகின்றன. இவரது “குற்றப்பரம்பரை” மற்றும் “அரியநாச்சி” ஆகிய இரு புதினங்களில் ஆப்பனாட்டு மறவர்கள்பங்கேற்கும்“எருதுகட்டு”நிகழ்வு குறித்த வரைவுகள் இடம்பெறுகின்றன. அத்துடன் இவர் “எருதுகட்டு” எனும் சிறுகதையினையும் எழுதியுள்ளார்.

மறவர்களிடம் காணப்படக்கூடிய இவ்வீர விளையாட்டில் அவர்கள் பெரும்பாலும் மாடு பிடிக்கும் வீரர்களாக உள்ளனர். உயிருக்குஅஞ்சாதுபயங்கரத்துணிச்சலுடன் கொல்லேறுகளை அடக்குகின்றனர். ஆப்பனாட்டு மறவர்களிடம் காணப்படக்கூடிய இப்பண்பாடு குறித்து “மறவர் சரித்திரம்” நூல் பதிவு செய்துள்ளது. அத்துடன் “தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்” நூலில் எட்கர் தர்ஸ்டன் திரு.ஜெ.எச்.நெல்சன் அவர்கள் மதுரை மாவட்டக் கையேட்டில் பதிவு செய்துள்ள விரிவான விபரத்தைப் பதிவு செய்கிறார்.

கொம்பூதி இளைஞர்கள் எருதுகட்டில் பங்கேற்று வீரத்துடன் காளைகளை அடக்கியுள்ள நிகழ்வுகளைக் “குற்றப்பரம்பரை” நாவல் பதிவு செய்கிறது.

கூடுற கூட்டமெல்லாம் கொம்பூதிக்காரன் விளையாட்டைப் பார்க்கக் கூடுகிற கூட்டம் தான். எங்கும் பிடிபடாமல் நாடு சுற்றி வரும் எருதுகட்டுக் காளையெல்லாம் கொம்பூதி இளவட்டங்கள் காட்டுகிற விளையாட்டில் கிறுகிறுத்துப் போகும் (குற்ற., பக்.268-269)

கமுதி வட்டாரத்தில் “பெருநாழி எருதுகட்டு” பேர்போன எருதுகட்டு ஆகும். இந்நிகழ்வு பெருநாழி காவல் தெய்வம் நிறை குல வள்ளி அம்மனுக்கு முளைப்பாரி எடுத்தல், அய்யனார் சாமிக்குக் குதிரை எடுப்பு ஆகியவற்றை ஒட்டி நடத்தப்படுகிறது. எருதுகட்டு நடப்பது பெருநாழி ஆக இருந்தாலும் மாடுபிடி வீரர்கள் அனைவரும் கொம்பூதிக்காரர்கள் தான். கொம்பூதிக்காரர்கள் வரவில்லை என்றால் ‘எருதுகட்டு’ நடத்த முடியாத நிலை இருக்கிறது.

எருதுகட்டு மற்றும் மஞ்சுவிரட்டு போன்ற நிகழ்வுகள் சாட்டப்பட்டவுடன், காளைகளின் உரிமையாளர்கள் மற்றும் மாடுபிடி வீரர்களை நிகழ்வினை நடத்தும் கிராமத்தினர் வெற்றிலை பாக்கு வைத்து அழைக்கும் வழக்கம் உள்ளது. இதுபோன்று பெருநாழியில் நடைபெறும் எருதுகட்டு நிகழ்விற்குக் கொம்பூதிக்காரர்கள் அழைக்கப்படுகிறார்கள். பெருநாழியின் முக்கியப் புள்ளிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து கொட்டு மேள வாத்தியங்களுடன் தாம்பூலத்தட்டு, மாலை, வெற்றிலை, பாக்கு ஆகியவற்றோடு கொம்பூதிக்குச் சென்று, வேயன்னா அவர்களுக்கு மரியாதை செய்து எருதுகட்டு நிகழ்விற்கு வருமாறு அழைக்கிறார்கள். அதற்கு வேயன்னா, வருசா வருசம் எருதுகட்டிலே நாங்க வந்து மாடு பிடிக்கிறது தானே வழக்கம்? எப்பவும் போல தகவல் சொன்னா… நாங்க வரப் போறோம். இந்த வருசம் என்ன புது மரியாதை (குற்ற., ப.282) என்று கேட்கிறார். எனவே எருதுகட்டு சாட்டப்பட்டவுடன் தகவல் சொல்லி அனுப்பக்கூடிய வழக்கம் இருந்திருப்பதை அறியமுடிகிறது.

எருதுகட்டு நிகழ்வில் ஊரின் “முதல் கரை” என்கிற மரியாதையினைப் பெற்றுள்ள மனிதருக்கு முக்கியப் பங்கு இருக்கிறது. பெருநாழிக்கு முதல் கரை தங்கச்சாமி, வேயன்னாவைக் கைகளை உயர்த்திக்

கும்பிட்டு அவருக்கு மரியாதை செய்கிறார். கொம்பூதி மக்களுக்கு "எருதுகட்டு" தெய்வ நம்பிக்கை சார்ந்த ஒரு சடங்காக இருக்கிறது.

இத்தனை வருசமா நடந்த எருதுகட்டிலே, மாடு குத்தி, எங்க இளவட்டங்க எத்தனை பேரு செத்துருக்கிறான்...! எத்தனை பேரு காயம் பட்டிருக்கிறான்! உயிரைப் பணயம் வச்சு நாங்க விளையாடுற விளையாட்டு, உங்களுக்கு வெறும் பொழுது போக்கா தெரியுது. மாடு குத்தி சாகுறதைக் கூட நாங்க சாமிக்கு உண்டான நேர்த்திக் கடனா நினைக்கிறோம் (குற்ற., ப.283) என்கிற வேயன்னா கூற்றின்வழி எருதுகட்டின் சடங்குத் தன்மை புலப்படுகிறது.

இன்னிக்கு எருதுகட்டிலே, கொம்பூதிக்காரன் குணத்தைப் பாருங்க எசமான். கூடச் சேர்ந்து மாடுபிடிக்கிறவன், கொம்புக் குத்துப்பட்டுச் செத்து விழுந்தாலும், அவனைத் தூக்க மாட்டான். காளையை மடக்கிப் பிடிக்கிறதிலேதான் குறியா இருப்பான் (குற்ற., ப.287)

எருதுகட்டு நிகழ்வில் மனித உயிரிழப்பு ஏற்படுகிறது. ஆனால் அத்தகைய "உயிரிழப்பை" வீரர்கள் பெரிதுபடுத்துவதில்லை. உயிரிழப்பைத் தெய்வத்திற்குச் செலுத்தப்பட்ட "காணிக்கையாக, "வீரமரணமாக" கருதுகிறார்கள். ராமசாமி எனும் மாடுபிடி வீரன் கல்யாணத்துக்கு முந்திய புதன்கிழமை நடந்த தரைக்குடி உமையம்மன் கோவில் எருதுகட்டில் மாடு பிடிக்கப் போனவன், குத்துப்பட்டுச் செத்துப் போனான் (அரி., ப.15) என்று அரியநாச்சி புதினம் பதிவு செய்கிறது. எருதுகட்டில் நடைபெறும் இத்தகைய "உயிர்பலிகள்" இந்நிகழ்விற்கும் நரபலிக்கும் இடையிலான தொடர்பைக் குறிப்பதாக உள்ளது. இறைவனுக்கு பலியிடுதலின் மறு வடிவம் தான் ஜல்லிக்கட்டு என்ற கருத்துள்ள போதிலும் கலாச்சார, பண்பாட்டு ரீதியில் இன்னும் இவற்றைப் பராமரிக்கும் மக்கள் நம்பிக்கை கொண்டுதான் இருக்கிறார்கள்[3] எனவும், மஞ்சுவிரட்டில் நரபலி மற்றும் குருதிபலி சார்ந்த நம்பிக்கைகள் அழுத்தமாகப் பதிவாகியுள்ளன. மனித உயிரையோ அல்லது மனித ரத்தத்தையோ தங்கள் தெய்வங்களுக்குப் பலியிடுவதற்காக மக்கள் கூடி மஞ்சுவிரட்டு நடத்துகின்றனர். "எங்கள் மஞ்சமலை அய்யனார் சாமி ஒரு உயிரையேனும் பலி எடுக்காமல் விடாது" (ராஜபாண்டி) என்கின்றனர் பாலமேடுவாசிகள்[4] எனவும் ஆய்வாளர்கள் சல்லிக்கட்டுக்கும் நரபலிக்கும் இடையிலான தொடர்பைப் புலப்படுத்துகின்றனர். இக்கருத்து, "உயிர்பலி" நிகழக்கூடிய "எருதுகட்டு" நிகழ்விற்கும் பொருந்திப் போகிறது.

பழங்காலத்தில் போர் மற்றும் வீரச் செயல்களில் இறந்த வீரர்களுக்கு நடுகல் எடுக்கும் வழக்கம் நிலவியதனைப் "பண்டைய இலக்கியங்களின்" வழியாக அறியமுடிகிறது. எருது விளையாட்டில் இறந்த வீரர்களுக்கும் நடுகல் எடுக்கும் வழக்கம் தமிழ்நாட்டில் நிலவியிருக்கிறது.

***கொவுரிச் சங்கன்
கருவந் துறையி
லே எருது விளை
யாடி பட்டான்
சங்கன் மகன் பெ
ரிய பயலு நட்டகல்லு***[5]

சேலம் மாவட்டம் பெத்த நாயக்கன் பாளையத்தில் கிடைத்த இந்த நடுகல், கொவுரிச் சங்கன் எனும் வீரன் கருவந்துறை என்னும் இடத்தில் நடந்த எருது விளையாட்டில் வீரமரணம் அடைந்தான். அவனுடைய நினைவாக சங்கன் என்பவரின் மூத்த மகன் நடுகல்லை நாட்டியுள்ளார் என்ற தகவலைத் தருகிறது. ரத்தம் சிந்துதல், உயிர் போதல் போன்ற நிகழ்வுகள் காளை

விளையாட்டுகளில் அரிதினும் அரிதாகத்தான் நிகழ்கின்றன. ஒரு விளையாட்டு என்கிற வகையில் ‘‘ஏறுதழுவுதல்’’ ஆட்டத்தை ஆடத்தெரிந்தவர்கள் அதனை ஆபத்தானதாகக் கருதுவதில்லை என்பதே கள யதார்த்தமாக இருக்கிறது.

**எருதுகட்டு - நடைமுறைசார் வழக்காறுகள்**

முன்னரே கூறியுள்ளவாறு ஆப்பனாட்டு மறவர்கள் எருதுகட்டு நிகழ்வில் மாடுபிடி வீரர்களாகப் பங்கேற்கிறார்கள். அவர்களுக்கென பிரத்யேக மரியாதைகள் வழங்கப்படுகின்றன.

ஆப்பநாட்டுக்குள்ள எங்கே எருதுகட்டு நடந்தாலும் சரி. எருதுகட்டு காளைக்கு பாக்கு வைக்கிற மாதிரி, ராமசாமித்தேவனுக்கும் பாக்கு வச்சு அழைக்கிறது நாட்டு வழக்கம். விளையாட வர்ற வெளியூர் காளைகள் வந்த இடத்திலே பிடிபடாமல் போச்சுன்னா... அந்த ஊருக்கு அவமானம். ஊர் மானம் தப்பணும்னா... மாடுபிடிக்க ராமசாமித்தேவன் இறங்கணும். அவன் பிடிக்கு அணையாத காளை கிடையாது. (அரி., ப.52)

எருதுகட்டை நடத்துபவர்கள் காளைகளுக்கு வழங்கும் முக்கியத்துவத்தைப் போல் காளைகளை அடக்கும் வீரர்களுக்கும் முக்கியத்துவம் வழங்கியுள்ளனர். வெளியூர் காளைகள் தங்கள் ஊரில் பிடிபடவில்லை எனில் அது ஊரின் மானக்குறைவு என கருதியுள்ளனர்.

கொம்பூதியில் வாழும் மறவர் இன மக்களின் இனக்குழுத் தலைவர் ‘‘வேயன்னா’ ஆவார். எருதுகட்டு நிகழ்விற்கு கொம்பூதி இளைஞர்களை அழைப்பதற்கு அவருக்கு பாக்கு, வெற்றிலை, தாம்பூலத்தட்டு வைத்து மரியாதை செய்யப்பட்டது போல் எருதுகட்டு அன்றும் மரியாதை செய்யப்படுகிறது.

தலையில் ‘‘உருமா’’ கட்டு, மணிக்கட்டில் மல்லிகைச் சரம், உள்ளங்கையில் எலுமிச்சம்பழம், கழுத்தில் மாலையோடு வேயன்னா முன்னே வர கொம்பூதி இளவட்டங்கள் திரண்டு வந்தார்கள். (குற்ற., ப.292)

தற்போது வேயன்னா மாடுபிடிப்பதில்லை என்றாலும் அவருக்கு மூத்த மாடுபிடி வீரர், ஊர்ப்பெரியவர் என்கிற முறையில் அவருக்கு மரியாதை செய்யப்படுகிறது.

எருதுகட்டு நிகழ்வில் வைக்கோல் பிரியால் திரிக்கப்பட்ட பெரிய வடத்தை காளையின் கழுத்தில் கோர்த்துவிடுகிறார்கள். மூக்கணாங்கயிறை அவிழ்த்து உருவிவிடுகிறார்கள்.

கிழக்கே சனிமூலையில், கோட்டை கிணறு வழியாக முதல் காளை இறங்கியது. நாலு பேர் கூடி, வடத்தைத் தூக்கி காளையின் கழுத்தில் கோர்த்து முடித்தார்கள். வடம் பிடிக்கும் விடலைகள் இங்கிருந்தே விசில் அடித்தார்கள். கழுத்துப் பாரம் தாங்க முடியாமல் மாடு திருகியது.

மாட்டுக்காரன், மூக்கணாங்கயிற்றை அவிழ்த்து விருட்டென உருவியதும், தார்க்கம்பால் பின் தொடையில் ஓங்கி ஒரு இடி இடித்தான். காளை ஒரு துள்ளுத் துள்ளி ஓடி மண்டியிட்டுக் ‘‘கொம்பு மண்’’ எடுத்து நிமிர்ந்து சிலிர்த்தது.

... ... ... ... ...

காளை, மேற்கே கிளம்பியது. விடலைகள், வடத்தை தூக்கிக் கொண்டு கிழக்கே ஓடினார்கள். வில்லாயுதமும் வையத்துரையும் காட்டுகிற கைச் சைகையில் கொம்பூதி இளவட்டங்கள் கண்ணாய் இருந்தார்கள்.

காளை, திரும்பி விடலைகளை விரட்டிப் போனது.

**‘‘டும்பளக்கா... டும்பளக்கா... டும்...’**

ஒருவனை கொம்புகளுக்கிடையில் தூக்கி விட்டெறிந்தது; சனம் கத்தியது.

வடத்தைப் போட்டுவிட்டு, விடலைகள் ஓட்டமெடுத்தார்கள். கெதியாய் ஓடிய சின்னக்கத்தி, காளையின் திமிலில் விழுந்து கவ்வினான்.

**காளை, குதியாய் குதித்தது. சின்னக்கத்தி, பிடியை விடலே**

**(குற்ற., பக்.294-295)**

எருதுகட்டு நிகழ்த்தப்படுதல், அந்நிகழ்வில் ஆப்பனாட்டு மறவர்களான மாடுபிடி வீரர்கள் காளையை அணைதல் உள்ளிட்ட நிகழ்வுகளை ஒரு திரைக்காட்சியைப் போல வாசகர்களுக்கு விவரிக்கிறார் வேல ராமமூர்த்தி. சல்லி கட்டுதல் என்னும் விளையாட்டு மறவர்களுக்குள் நடைபெறும். இது இப்பொழுது அரசினரால் தடுக்கப்பட்டுள்ளது. குறிக்கப்பட்ட ஒரு தினத்தில் மூர்க்கமுள்ள எருதுகள் களரிக்குக் கொண்டு வரப்படும். அவற்றிலொன்றை அவிழ்த்துவிட்டால் அது நிற்கும் கூட்டத்திற் பாய்ந்து ஒருவனைத் துரத்திச் செல்லும் அவன் நிலத்தில் விழுந்து படுத்துக் கொள்வான். அப்பொழுது அது இன்னொருவனைத் துரத்திச் செல்லும். மக்கள் ஆரவாரஞ் செய்து ஓடுவார்கள்[6] என்கிறார் ந.சி.கந்தையாபிள்ளை. இன்றும்கூட நடைபெறும் காளை விளையாட்டுகளில் காளை குத்தவரும்போது மாடுபிடி வீரர் படுத்துக் கொண்டால், அக்காளை அவ்வீரரைக் கடந்து சென்று விடுவதைக் காணமுடிகிறது. அதே போன்று காளை விளையாட்டுகளைத் தடை செய்வது ஒன்றும் புதிதானதல்ல. காலனிய ஆட்சியிலிருந்தே தடை செய்யப்படுதல் என்பது தொடர்ந்து நடைபெற்று வருகின்றது என்பதனையும் அறிய முடிகிறது.

வேல ராமமூர்த்தி புதினங்களில் இரண்டு ஊர் எருதுகட்டு நிகழ்வுகள் விவரிக்கப்படுகின்றன. அவை:

1. பெருநாழி நிறைகுள வள்ளியம்மை எருதுகட்டு (குற்றப்பரம்பரை)
2. தரைக்குடி உமையம்மை எருதுகட்டு (அரியநாச்சி)

ஆகியனவாகும். இவ்விரு நிகழ்வுகளிலும் ஆப்பநாட்டு இளைஞர்கள் மாடுபிடி வீரர்களாகக் களம் கண்டு திறமையாக மாடுபிடிக்கிறார்கள். இந்நிகழ்வில் ஆப்பனாட்டு மறவர் இனத்தைச் சேராத ஒருவர் மட்டுமே பங்கேற்பதைக் காணமுடிகிறது. அவர் பெரும்பச்சேரி "வையத்துரை" ஆவார். ஆப்பநாட்டு மறவர்கள் உயிரைப் பணயம் வைத்து எருதுகட்டு ஆடுகின்றனர். எருதுகட்டு நிகழும் களத்தில் இவர்தம் உயிரைத் துச்சமென மதிக்கும் வீரநிலையினை இரண்டு வீரர்கள் வழியாக அறியமுடிகிறது. காளை அடிவயிற்றில் குத்திக் கிழித்து குடலே சரிந்தபோதும் நரிவேலு எனும் மாடுபிடி வீரன் இயல்பாக இருக்கிறார்.

கொம்புக் குத்துப்பட்ட ஊமையன் நரிவேலுவின் அடிவயிறு, குடலைத் துருத்தியது.

பெஞ்சுப் பலகையில் உட்கார்ந்திருந்த வேயன்னா, எழுந்து ஓடி, தலையில் கட்டி இருந்த உருமா துண்டை அவிழ்த்து, நரிவேலுவின் அடிவயிற்றோடு குடலை உள்ளே தள்ளிச் சேர்த்துக் கட்டிவிட்டார்.

**ஊமையன் நரிவேலு எழுந்து இளவட்டங்களோடு கலந்து போனான்**

**(குற்ற., ப.300)**

வேடிக்கை பார்ப்பவர்களைப் பதைபதைக்க வைக்கும் இக்காட்சி கொம்பூதி மக்களிடம் எவ்விதச் சலனத்தையும் ஏற்படுத்தவில்லை என்பது உற்றுநோக்கத்தக்கது.

திருமணம் நிச்சயமானப் பிறகும் கூட எருதுகட்டில் பங்கேற்கிறார் வெள்ளாங்குளம் ராமசாமித் தேவன். அவர் யாராலும்

அடக்க முடியாத காளையான "கருமல் ராமு" எனும் காளையினை அடக்கவும் செய்கிறார்.

*கருமல் காளை, சீத்தி போட்டு மைதானத்தைச் சுத்தி வருது. எட்டுச் சுத்து ஒன்பதாவது சுத்துலே... ஒத்தையிலே போய் கொம்புலெ விழுந்தான் ராமசாமித்தேவன். கருமல் ராமு, குதி குதின்னு குதிக்குது. கொம்புலெ தூக்கிவச்சுக்கிட்டே உலுப்புது. ம்ஹும். ராமசாமித்தேவன் பிடியை விடலே. காளை நல்லா குதிச்சு தவிக்கவும், தன் கால்களால், காளையின் முன்னத்திங்காலைப் பிண்ணி விழுத்தாட்டினான். எங்கும் பிடிபடாமல் சுத்தி வந்த கருமல் காளை ராமு, ராமசாமித்தேவன் பிடியிலே சரிஞ்சது. (அரி., ப.53)*

ராமசாமித் தேவனால் அடக்கப்பட்ட கருமல் காளை ராமசாமித் தேவனைக் குத்திக் கொலை செய்துவிடுகிறது. எருது கட்டு நிகழ்வில் பங்கேற்கும் மாடுபிடி வீரர்களுக்கும் படுகாயங்கள் ஏற்படுவதுடன், இதுபோன்ற மரணங்களும் அவ்வப்போது நிகழ்கின்றன என்பதனை வேல ராமமூர்த்தியின் புதினங்கள் வழி அறியமுடிகிறது.

இவர்தம் புதினங்களில் சித்தரிக்கப்படும் ஆப்பனாட்டு மறவர்கள் சிறந்த மாடுபிடி வீரர்களாக இருக்கின்றனர். ஆனால் காளைகள் வளர்ப்பவர்களாக இல்லை. இவர்களுடைய இப்பண்பு "வேட்டைச் சமூகத்தின்" எச்சமாகக் கருத இடமுண்டு. "குற்றப்பரம்பரை" புதினம் குறிப்பிடும் கொம்பூதி மறவர்கள் காடுகளிலிருந்து புலம்பெயர்ந்த வேட்டைச் சமூகத்தினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆயுதங்களை வைத்து வலிமையான விலங்குகளை வேட்டையாடும் இவர்கள் நிராயுதபாணிகளாகக் களத்தில் இறங்கி வலிமையான காளைகளை அடக்குகின்றனர். காளைகள் வலிமையானவையாக இருப்பினும் காளையின் கழுத்தில் மாட்டப்படும் கனத்த வடம் காளையின் வலிமையினையும் மூர்க்கத் தன்மையினையும் ஓரளவு மட்டுப்படுத்துகிறது.

## முடிவுரை

விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான விளையாட்டுகள் உலகின் பல இடங்களிலும் நடைபெறுகின்றன. பழங்கால ரோமானியாவில் கொடிய மிருகங்கள் இருக்கக்கூடிய கூண்டுகளுக்குள் அடிமைகளை அனுப்பிப் போரிடச் செய்வர். நிறைய அடிமைகள் மரணம் அடைந்தாலும் ஒரு சில வீரர்கள் மிருகங்களை அடக்கியும் உள்ளனர். "எருதுகட்டு" நிகழ்வில் இத்தகைய "அடிமைத்தனத்தின்" எச்சங்களும் இருப்பதாகத் தெரிகின்றது. காளைகளை வளர்ப்பவர்கள் சமூக அந்தஸ்த்தில் உயர்ந்தவர்களாகவும், அடக்குபவர்கள் சாமானியர்களாகவும் இருக்கின்ற நிலை "அடிமைத்தனத்தின்" கூறுகளை இனங்காட்டுவதாக அமைகிறது. எவ்வாறாயினும் ஆப்பனாட்டு மறவர்தம் பண்பாட்டில் எருதுகட்டு நிகழ்வு சடங்குத் தன்மையுடைய ஒரு விளையாட்டாக வேல ராமமூர்த்தியின் இருபுதினங்களிலும் பதிவுசெய்யப்பட்டுள்ள தன்மையினைக் காணமுடிகிறது.

## குறிப்புகள்

1. பாவெல் பாரதி (தொ.ஆ.), ஏறுதழுவுதல்: சல்லிக்கட்டு: தொன்மை - பண்பாடு - அரசியல், பக்.100-101
2. கோணங்கி, பாழி, ப.267
3. பாவெல் பாரதி, மு.கூ.நூ., ப.114.
4. முனைவர் க.சி.பழனிக்குமார் (க.ஆ.), கீதாரிகள் இனவரைவியல், ப.88.
5. பெ.அர்த்தநாரீஸ்வரர் (க.ஆ.), தமிழ்நாடு அரசுத் தொல்பொருள் ஆய்வுத் துறையின் காலாண்டு இதழ் - 15, ப.14
6. ந.சி.கந்தையாபிள்ளை, தென்னிந்திய குலங்களும் குடிகளும், பக். 97-98.

## துணைநின்ற நூல்கள்

1. ந.சி.கந்தையாபிள்ளை. 2015. *தென்னிந்திய குலங்களும் குடிகளும்*, சென்னை, சந்தியா பதிப்பகம்.
2. கோணங்கி, பாழி. 2000. *தி பார்க்கர்*, சென்னை, முதல் பதிப்பு.
3. பழனிக்குமார், க.சி. 2016. *ஆண்டாளின் கவிதைவெளி*, சந்தியா பதிப்பகம், சென்னை.
4. பாவெல் பாரதி. 2017. (தொ.ஆ.), *ஏறுதழுவுதல்: சல்லிக்கட்டு: தொன்மை - பண்பாடு - அரசியல்*, கருத்து ஸ்ரீ பட்டறை, மதுரை.
5. வேல ராமமூர்த்தி. 2019. *குருதியாட்டம்*. சென்னை, டிஸ்கவரி புக் பேலஸ்.
6. வேல ராமமூர்த்தி. 2021. *அரியநாச்சி*. சென்னை, டிஸ்கவரி புக் பேலஸ்.